Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jmrgroup.org

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

காலை 10 மணி முதல்
மதியம் 2 மணி வரை -
முதல் முறை இந்த
நோட்டீசை
கொண்டுவருபவர்களுக்கு
சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு,
வடபழனி, சென்னை - 26.

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 19 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 130

லஷ்கர் அமைப்பின் பயங்கரவாதி லத்தீஃப் பட்-ஐச் சுட்டு வீழ்த்திய ஜம்மு-காஷ்மீர் காவல்துறை, இந்திய ராணுவம், மத்திய ரிசர்வ் காவல் படை வீரர்கள், உளவு அமைப்புகளுக்கு மத்திய அமைச்சர் அமித் ஷா பாராட்டு

சென்னை – 19 நவம்பர், 2026 லஷ்கர் அமைப்பின் பயங்கரவாதி லத்தீஃப் பட்-ஐச் சுட்டு வீழ்த்திய ஜம்மு-காஷ்மீர் காவல்துறை, இந்திய ராணுவம், மத்திய ரிசர்வ் காவல் படை வீரர்கள், உளவு அமைப்புகளுக்கு மத்திய அமைச்சர் அமித் ஷா பாராட்டு.

கஷ்மீர் பள்ளத்தாக்கில் லஷ்கர் அமைப்பின் உள்ளூர் பயங்கரவாதிகளில் எஞ்சியிருந்த கடைசி நபரான லத்தீஃப் பட்-ஐ, குல்காமில் இன்று அதிகாலை நடைபெற்ற நடவடிக்கையில் சுட்டு வீழ்த்தியதற்காக, ஜம்மு-காஷ்மீர் காவல்துறை, ராணுவம், மத்திய ரிசர்வ் காவல் படை, உளவு அமைப்புகளைச் சேர்ந்த வீரர்களை மத்திய உள்துறை, கூட்டுறவுத்துறை அமைச்சர் அமித் ஷா பாராட்டியுள்ளார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் அவர் பதிவிட்டிருப்பதாவது:

“ஜம்மு-காஷ்மீர் காவல்துறை, இந்திய ராணுவம், மத்திய ரிசர்வ் காவல் படை, உளவு அமைப்புகளின் ஒருங்கிணைந்த முயற்சியால், காஷ்மீர் பள்ளத்தாக்கில் லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் கடைசி உள்ளூர் பயங்கரவாதியான லத்தீஃப் பட், இன்று அதிகாலை குல்காமில் நடத்தப்பட்ட தாக்குதலில் சுட்டுக்கொல்லப்பட்டார். அவருடன் தொடர்புடைய மற்றொரு பயங்கரவாதியான உமர் நிசார், முந்தைய நாள் குல்காமில் நடைபெற்ற தாக்குதலில் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த நடவடிக்கை முழுவதும் மிக உயர்ந்த அளவிலான ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட்டது. ஜம்மு காஷ்மீர் காவல்துறை, ராணுவம், மத்திய ரிசர்வ் காவல் படை, உளவுத்துறை அமைப்புகளைச் சேர்ந்த துணிச்சல்மிக்க வீரர்களுக்கு நாடு தனது வீர வணக்கத்தைச் செலுத்துகிறது.”